# பொது அறிவு - தாள் I

நேரம் 3 மணி　　　　　　உச்ச மதிப்பெண்கள் - 300

வழிமுறைகள்-

i) ஒவ்வொரு வினாவும் ஆங்கிலத்திலும் மற்றும் தமிழிலும் அச்சிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அனைத்து வினாக்களுக்கான விடைகளை முழுவதும் ஆங்கிலத்திலோ அல்லது தமிழிலோ மட்டும் எழுத வேண்டும். பகுதி தமிழிலும், பகுதி ஆங்கிலத்திலுமாக கலந்து எழுதுதல் கூடாது.

ii) பிரிவுகள் I, II மற்றும் III ல் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விண்ணப்பதாரர்கள் கட்டாயமாக விடையளித்தல் வேண்டும்.

iii) ஒவ்வொரு வினாவிற்கான மதிப்பெண்கள் அந்தந்த வினாவின் முடிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

iv) ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள்தான் முடிவானதாகும்.

v) வரைபடங்கள் (Graphs) வரைய வரைபடத்தாள்கள் வழங்கப்படும்.

## பகுதி - I

1. இந்தியாவின் அணுசக்தித் திட்டத்தை நுணுகி ஆராய்க. (250 வார்த்தைகள் அளவில்)　　35

அல்லது

தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சிக்காக காமராஜர் ஆற்றிய பணிகளை ஆராய்க. (250 வார்த்தைகள் அளவில்)　　35

2. கீழ்க்கண்ட ஏதேனும் இரண்டிற்கு விடை தருக. (ஒவ்வொன்றிற்கும் 150 வார்த்தைகள் அளவில்)

2 x 15 = 30

(அ) கே.பி. ஹெட்ஜ்வர் ( K.B. Hedgewar ) பற்றி எழுதுக.

(ஆ) சுயமரியாதை இயக்கத்தை விளக்குக.

(இ) கதகளி மற்றும் மணிபுரி நாட்டியங்கள் பற்றி நீவிர் அறிவன யாவை?

RADIAN IAS ACADEMY

3. கீழ்க்கண்ட ஏதேனும் மூன்றிறகு விடை தருக. (ஒவ்வொன்றுக்கும் 75 வார்த்தைகள் அளவில்)

(அ) ஆரிய சமாஜத்தின் பணிகளை மதிப்பிடுக.

(ஆ) பஞ்சசீலத்தை ஆராய்க.

(இ) எம்.ஜி.இராமச்சந்திரன் கொண்டு வந்த மதிய உணவுத்திட்டத்தை மதிப்பிடுக.

(ஈ) யூனியன் பிரதேசங்களின் அரசியல் ரீதியான தகுதி பற்றி எழுதுக.

4. (அ) கீழ்க்கண்டவற்றின் முதன்மைக் கூறுகளை எழுதுக. (ஒவ்வொன்றிற்கும் இருபது வார்த்தைகள் அளவில்)

i) தாஷ்கண்ட் உடன்பாடு

ii) மன்னர் மான்யம் (Privy Purse)

iii) 1904ஆம் ஆண்டு இந்தியப் பல்கலைக்கழகச் சட்டம்.

(ஆ) கீழ்க்கண்டவற்றைக் குறித்து நீவிர் அறிவது யாது?

iv) யூனியனிஸ்ட் கட்சி

v) இராமகிருஷ்ணர் இயக்கம்

vi) சுதந்திராக் கட்சி

vii) ஆரோவில் (Auroville)

viii) பன்னாட்டு சமூக உறவு மற்றும் அமைதிக்கான ஜவஹர்லால் நேரு விருது

(இ) கீழ்க்கண்ட நபர்கள் எதனால் புகழ் பெற்றனர்?

ix) எம்.விஸ்வேஸ்வரய்யா

x) கே.எம். முன்ஷி

xi) மறைமலை அடிகள்

xii) டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார்

xiii) ராஜா ரவிவர்மா

xiv) காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப்

xv) பச்சையப்ப முதலியார்

15 x 2=30

## பகுதி – II

5. இந்தியாவில் ஏற்பட்டுள்ள மதவாத அரசியலின் தோற்றம் மற்றும் வளர்ச்சி பற்றி நுணுகி ஆராய்க. (250 வார்த்தைகள் அளவில்)

35

அல்லது

ஸ்ரீலங்காவில் ஏற்பட்டுள்ள இனக் கலவரம் பற்றி விடையளிக்கவும். (250 வார்த்தைகள் அளவில்)　25

6. கீழ்வருவனவற்றுள் எவையேனும் மூன்று கேள்விகளுக்கு விடையளிக்கவும்　　3x10=30

அ) எல்.கே. கிர்லோஸ்கர் ஆற்றிய பணிகளை மதிப்பீடு செய்க.

ஆ) டயாலிஸிஸ் (Dialysis) பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக.

இ) காமன்வெல்த் அமைப்பு பற்றி எழுதுக.

ஈ) மாஸ்கோ பிரகடனம் (2001) பற்றி சிறு குறிப்புத் தருக.

7. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்　　5x6=30

அ) முல்லைப் பெரியார் அணைச் சிக்கல் பற்றி விவாதிக்க.

ஆ) 2000 ஆம் ஆண்டில் இந்தியாவில் நடந்த சர்வதேசத் திரைப்பட விழா பற்றி எழுதுக.

இ) லலித் கலா அகாடமி பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

ஈ) சர்வதேச மன்னிப்புக் கழகத்தின் பணிகளை விவாதிக்க.

உ) ஆந்த்ராக்ஸ் (Anthrax) என்றால் என்ன?

ஊ) 2001 ஆம் ஆண்டு பொடோ (POTO) பற்றி சிறு குறிப்பு தருக.

எ) பொது இடத்தில் புகைபிடித்தல் பற்றி உச்ச நீதிமன்றம் வழங்கி இருக்கும் நியதி என்ன?

8. அ) கீழ்க்கண்டவர்கள் யார்? எதனால் அவர்கள் பத்திரிகை செய்திகளில் இடம் பெற்றனர்?

i) மீரா நாயர்
ii) பீமல் ஜலான்
iii) அப்துல் சலாம் சயீஃப்
iv) மல்லேஸ்வரி
v) ஜி.கே வாசன்
vi) ஜக்மோகன் டால்மியா

ஆ) கீழ்வருவன பற்றி நீவிர் அறிந்தது யாது?

vii) மக்சேசே விருது(Magsaysay Award)
viii) ரேடியோ காஷ்மீரின் முக்கியத்துவம்
ix) கலைமாமணி விருது

இ) கீழ்க்கண்ட நூல்களின் ஆசிரியர்கள் யார்?

x) இந்தியா டிவைடட் (India Divided)
xi) ட்ரூத், லவ் அண்ட் எ லிட்டில் மலீஸ் (Truth, Love and a little Malice)

ஈ) கீழ்க்கண்டவைகளுக்கு விடையளி-

xii) 2000ம் ஆண்டுக்கான இந்திய அரசின் சிறந்த திரைப்படக் கதை எழுத்தாளர்

xiii) 2001ஆம் ஆண்டுக்கான புக்கர் பரிசைப் பெற்றவர் யார்?

xiv )2001ஆம் ஆண்டுக்கான லோக்மான்ய திலக் விருதைப் பெற்றவர் யார்?

xv) 2001ஆம் ஆணடுக்கான காந்தி சேவா விருது யாருக்கு வழங்கப்பட்டது?

## பகுதி - III

9. தினக்கூலி பெறும் தொழிலாளர்களின் அலைவெண் பரவல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| தினக்கூலி (ரூ) | தொழிலாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 10 – 20 | 8 |
| 20 – 30 | 12 |
| 30 – 40 | 35 |
| 40 – 50 | 25 |
| 50 – 60 | 6 |
| 60 - 70 | 4 |

அ) வரைபடத் தாள் கொண்டு கீழ் குவிவு அலைவெண் வரையை வரைக. 8

ஆ) ரூ.35க்குக் குறைவாக தினக்கூலி பெறும் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுக. 4

10. கீழே கொடுக்கப்பட்ட விவரங்களுக்கு-

| இனம் | மாதாந்திர செலவு |
|---|---|
| உணவு | 35.5% |
| உடை | 12.6% |
| வாடகை | 10.2% |
| கல்வி | 18.2% |
| இதர | 23.5% |
| மொத்தம் | 100% |

அ) ஒரு வட்ட விளக்கப்படம் வரைக. 8

ஆ) ஒரு குடும்பத்தின் மொத்த மாதச் செலவு ரூ.8,400 எனில் ஒவ்வொரு இனத்திற்கான செலவினைக் கணக்கிடு. 4

11. A,B என்ற இரு தொழில் நிறுவனங்களின் தொழிலாளர்களின் வாராந்திர சராசரி சம்பளம் (ரூபாயில்) , சம்பளத்தின் திட்ட விலக்கம் (ரூபாயில்) தொழிலாளர்களின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| நிறுவனம் | கூட்டுச் சராசரி (ரூபாயில்) | திட்ட விலக்கம் (ரூபாயில்) | தொழிலாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| A | 34.5 | 5 | 476 |
| B | 28.5 | 4.5 | 524 |

அ) எந்த நிறுவனம் தொழிலாளர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கின்றது?

ஆ) இரு நிறுவனங்களின் தொழிலாளர்களின் இணைந்த குழுவிற்கு கூட்டுச் சராசரி வாரக்கூலியைக் காண்க.

இ) எந்த நிறுவனத்தில் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படுகின்ற கூலி நிலைத்த தன்மை பெற்றது எனக் கண்டறிக.

12. பின்வரும் பரவல் 100 நிறுவனங்களின் விற்பனையை (ரூபாயில் ) குறிக்கின்றது.

| விற்பனை (ரூபாயில்/ | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| (1) | (2) |
| 2,500 க்கு கீழ் | 7 |
| 4,500 க்கு கீழ் | 13 |
| 6,500 க்கு கீழ் | 24 |
| 8,500 க்கு கீழ் | 36 |
| 10,500 க்கு கீழ் | 60 |
| 12,500 க்கு கீழ் | 85 |
| 14,500 க்கு கீழ் | 100 |

அ) கொடுக்கப்பட்டுள்ள பரவலை அலைவெண் பரவலாக மாற்றி அமை. 5

ஆ) ரூ.8,500க்கு மேமல் விற்பனை செய்யும் நிறுவனங்களின் சதவீதத்தைக் கணக்கிடுக. 4

இ) மேல் குவிவு அலைவெண்களைப் பெறுக. 5

RADIAN IAS ACADEMY

## பொது அறிவு - தாள் II

நேரம் 3 மணி　　　　　உச்ச மதிப்பெண்கள் - 300

வழிமுறைகள்-

vi) ஒவ்வொரு வினாவும் ஆங்கிலத்திலும் மற்றும் தமிழிலும் அச்சிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அனைத்து வினாக்களுக்கான விடைகளை முழுவதும் ஆங்கிலத்திலோ அல்லது தமிழிலோ மட்டும் எழுத வேண்டும். பகுதி தமிழிலும், பகுதி ஆங்கிலத்திலுமாக கலந்து எழுதுதல் கூடாது.

vii) பிரிவுகள் I, II மற்றும் III ல் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விண்ணப்பதாரர்கள் கட்டாயமாக விடையளித்தல் வேண்டும்.

viii) ஒவ்வொரு வினாவிற்கான மதிப்பெண்கள் அந்தந்த வினாவின் முடிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ix) ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள்தான் முடிவானதாகும்.

x) வரைபடங்கள் (Graphs) வரைய வரைபடத்தாள்கள் வழங்கப்படும்.

### பகுதி - I

1. அ) இந்திய அரசியலமைப்பின் மூன்றாம் பாகத்தில் அடங்கியுள்ள அரசியல் சாசன நிவர்த்திகளை பற்றி விவரி (250 சொற்களில்) 40

அல்லது

ஆ) இந்தியாவில் மாநில ஆளநர் எவ்வாறு நியமிக்கப்படுகிறார்? அந்நியமன முறை அவர் சுதந்திரமாக செயல்படுவதற்கு அனுமதிக்கிறதா? (250 சொற்களில் ) 40

2. அ) அடிப்படை உரிமைகளுக்கும் வழிகாட்டி நெறிமுறைகளுக்கும் உள்ள வேறுபாட்டை கூறுக. எந்த அளவிற்கு வழிகாட்டி நெறிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன? (250 சொற்களில்) 40

அல்லது

ஆ) இந்திய அரசியலமைப்பின் 370வது ஷரத்தின் முக்கியத்துவத்தை விவாதி. (250 சொற்களில்) 40

3. அ) இந்தியாவில் அழுத்தக் குழுக்களின் பங்கினை விவரி. (250 சொற்களில்) 40

அல்லது

ஆ) திட்டக் குழுவின் கட்டமைப்பையும் செயல்பாட்டையும் விவாதிக்க (250 சொற்களில்) 40

4. ஏதேனும் இரண்டினுக்கு விடையளிக்க. ஒவ்வொரு விடையும் 150 வாத்தைகளுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். 20 + 20 = 40

அ) இந்திய அரசியலமைப்பின் 24வது திருத்தத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுக.

ஆ) இந்திய துணை ஜனாதிபதி எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

இ) இந்திய அரசியலமைப்பில் சொத்துரிமையின் நிலை என்ன?

ஈ) மக்களவையில் சபாநாயகரின் அதிகாரம் என்ன?

### பகுதி – II

5. ஏதேனும் இரண்டினுக்கு விடையளிக்க. (விடைகள் ஒவ்வொன்றும் 150 சொற்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்). 20 + 20 = 40

அ) "இந்தியா ஒரு துணைக் கண்டம்" என்பதை தெளிவாக்குக.

ஆ) 'வெண்மைப் புரட்சி' என்றால் என்ன? இந்தியாவைப்ப பொறுத்தமட்டில் இது தொழில் புரட்சியை விட எவ்வகையில் மேம்பட்டது?

இ) மழைநீர் அறுவடை பற்றிவிளக்குக.

ஈ) 9வது ஐந்தாண்டு திட்டத்தில் குறிப்பாக விவசாயம் பற்றி ஆய்வு செய்க.

6. ஏதேனும் இரண்டினுக்க விடையளிக்க (விடைகள் ஒவ்வொன்றும் 150 சொற்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்/. 15 + 15 = 30

அ) கிருஷ்ணா நதி திட்டத்தினால் தமிழ்நாட்டிற்கு ஏற்படும் நன்மைகளைத் தருக.

ஆ) இந்தியாவில் உள்ள வனவிலங்குகளைப் பற்றி சிறு குறிப்பு தருக. வனவிலங்குகளைப் பாதுகாக்க மேற்கொள்ளப்படும் வழிமுறைகளைக் குறிப்பிடுக.

இ) மும்பை நகரைச் சுற்றிலும் ஆரம்ப காலத்தில் பருத்தி நெசவாலைகளின் செறிவு அதிகம் இருந்ததற்கான காரணங்களைத் தொகுக்க.

ஈ) 'விவசாயம் அல்லாத' துறைகள் யாவை? இந்தியப் பொருளாதாரத்தில் இவற்றின் பங்க என்ன?

7. ஏதேனும் இரண்டினுக்கு விடையளிக்க. (விடைகள் ஒவ்வொன்றும் 150 சொற்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்) 20 + 20 = 40

அ) தோல் மற்றும் தோல் பொருட்கள் இவற்றின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் இந்தியாவின் தற்போதைய நிலையை விளக்குக.

ஆ) இந்திய விவசாயத்திலுள்ள பிரச்சினைகளையும், அது இந்திய பொருளாதாரத்திதல் வகிக்கும் பங்கையும் சுருக்கமாக ஆராய்க.

இ) இந்தியாவில் மீன்வளத்துறையின் வளர்ந்துவரும் முக்கியத்துவம் பற்றித் தருக.

ஈ) சோடா நாகபுரி பீடபூமி இந்தியாவின் தொழிற்சாலைகளின் இதயம் ஆக அமைந்துள்ளது. விவரி.

RADIAN IAS ACADEMY

8. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கிற்கு விடையளிக்கவும் (ஒவ்வொன்றும் சமார் 25 சொற்கள்) 4 x 3 = 12

அ) பின்வருவன எதைக் குறிப்பிடுகின்றன?
- i) என்.ஈ.ஈ.ஆா.ஐ. (NEERI)
- ii) ஐ.ஜி.சி.எ.ஆர், (IGCAR)
- iii) சி.டி.ஆா.ஐ. (CDRI)

ஆ) பின்வருவன எங்கு அமைந்துள்ளன?
- i) இந்திய வான்வெளி ஆராய்ச்சி அமைப்பு (ISRO)
- ii) உந்து திரவ ஆய்வுக்கூடம் (LPL)
- iii) மத்திய உணவு தொழில்நுட்ப ஆராய்ச்சிக்கூடம் (CFTRI)

இ) சாதாரண வெப்பமானியையும் மருத்துவ வெப்பமானியையும் வேறுபடுத்திக் காட்டுக.

ஈ) தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தின் தாது வளம் குறித்து எழுதுக.

உ) மனிதனில் படியெடுத்தல் (Cloning) முறை தொடர்பான விமர்சனங்கள் யாவை?

ஊ) தாவரங்களின் இரண்டாம் நிலை வளர்சிதை மாற்றிகளின் மருத்துவப் பலன்கள் யாவை?

9. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்கு விடையளிக்கவும் (ஒவ்வொன்றும் சுமார் 25 சொற்கள்) 3 x 3 = 9

அ) செயற்கைக் கோள்களின் பயன்பாடுகள் பற்றி எழுதுக.

ஆ) படிக வடிவப் பொருள்களையும் படிக வடிவமல்லாத பொருள்களையும் வேறுபடுத்துக.

இ) குண்டு ரயிலின் (Bullet train) அறிவியல் அடிப்படை பற்றி எழுதுக.

ஈ) கணினிகளின் தலைமுறைகள் பற்றி சிறு தொகுப்பு எழுதுக.

உ) குருசடை தீவின் உயிரியல் முக்கியத்துவம் யாது?

ஊ) பசுமை வீட்டு விளைவுக்கான காரணங்களையும் அதன் தீங்குகளையும் பற்றி எழுதுக.

10. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்கு விடையளிக்கவும் (ஒவ்வொன்றும் சுமார் 25 சொற்கள்) 3 x 3 = 9

அ) ஒரு மடங்கு கனமுள்ள இரு கம்பளிப் போர்வைகள். இரு மடங்குள்ள ஒரு கம்பளிப் போர்வையுடன் ஒப்பிடும்பொழுது மிகவும் கதகதப்பாக இருக்கிறதா? அப்படியெனில். அதற்கான காரணம் யாது?

ஆ) கனநீர் என்றால் என்ன? அதன் பயன்பாடுகள் யாவை? தமிழகத்தில் எங்கு கனநீர் ஆலை அமைந்துள்ளது?

இ) RAM, ROM - இவற்றை வேறுபடுத்திக் காட்டுக.

ஈ) தமிழகத்தின் எந்த ஊர் தொல்லுயிரிகளுக்குப் பெயர் பெற்றது? தொல்லுயிரிகளின் வயது எவ்விதம் நிர்ணயிக்கப்படுகிறது?

உ) ஆங்கோஜீன்கள் என்பவை யாவை? மனிதனில் ஒரு நோய் விளைவதை அவை எவ்விதம் முன்னரே தீர்மானிக்கின்றன?

ஊ) நுண்ஊட்டப் பொருள்களின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.

*****

**GROUP-I INTENSIVE MAINS COACHING**

- **CLASSES BY EXPERTS**
- **Special Emphasis for STATISTICS**
- **MANY MORE MOCK TESTS**
- **Special Emphasis for TWO Mark Qns.**
- **CURRENT AFFAIRS NOTES**

**RADIAN BOOKS SHOP**

**ALL COMPETITIVE BOOKS, JOURNALS ARE AVAILABLE WITH DISCOUNTS**

**CONTACT- 98404-33955**

**FREE SMS ALERT TO YOUR MOBILE**

**To get FREE SMS**
**SMS your Name, Place to 98404-33955**

RADIAN IAS ACADEMY